www.facebook.com / newsplustamil    www.newsplus.lk    twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

20 FEBRUARY 2023 - MONDAY    Pages - 07    E Paper - # 029 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK    E-mail: editor@newsplus.lk

# தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டாலும் மக்கள் பணிகள் தொடரும்



### முஜிபுர் ரஹ்மான்

உள்ளூராட்சித் சபைத் தேர்தல் நடத்தப்படுமா என்பதில் சந்தேகங்கள் மேலோங்கியுள்ள நிலையில், மக்களுக்கான சேவைகள் தொடரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளருமாகிய முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

02 »»

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் குறைப்பு:

# சிறுபான்மை தலைமைகள் கரிசனை காட்டவேண்டும்

### சமூக ஆர்வலர்கள் வலியுறுத்து

(சுஐப்,எம்,காசிம்)

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால், ஏற்கனவே உள்ள வட்டாரங்களின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்த விஸ்தீரணங்கள் எந்தளவு சமூகங்களின் பிரதிநிதித்துவங்களைப் பாதிக்கும் நிலை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு சிறுபாண்மை தலைமைகள் இது விடயத்தில் கூடிய கரிசனை காட்ட

02 »»



## மக்களுக்கு நரகத்தை காட்டி:

# ராஜபக்ஸாக்களை சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் ஜனாதிபதி

### பதுளையில் சஜித் பிரேமதாஸ



ஜனாதிபதி மக்களுக்கு நரகத்தைக் காட்டி ராஜபக்சர்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பதுளையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை அழித்த ராஜபக்சர்கள் மக்களின் வாழ்வை முற்றிலுமாக

02 »»

# வேட்பாளர்களின் செலவு குறைப்பு

### ஆராய்வதற்கு விஷேட குழு

### இளைஞர்கள் மத்தியில் ஜனாதிபதி

தேர்தலின் போது வேட்பாளர் ஒருவர் அதிக பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத வகையில் தேர்தல் முறையை உருவாக்குவது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மற்றும் எதிர்காலத்

02 »»

# உள்ளூராட்சி நியமன பத்திரங்கள் ரத்து செய்யப்படலாம்



### மஹிந்த தேசப்பிரிய

உள்ளூராட்சி மன்றங்களின் நியமனப் பத்திரங்களை ரத்து செய்து

02 »»

# தேர்தலை ஒத்திபோடும் மனு உச்ச நீதிமன்றில் இன்று விசாரணை

உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைக்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நாளை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

ஓய்வு பெற்ற இராணுவ கேனல் ஒருவர் இந்த மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார் .

# கல்விக் கல்லூரி பரீட்சை தொடர்பில் மேன்முறையீடு செய்ய அவகாசம்

2019, 2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி கல்விக் கல்லூரிகளுக்கு நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு கல்வி அமைச்சு அவகாசம் அளித்துள்ளது.

02 »»

# "பிஸ்னஸ் கிளாஸில்" பயணிக்க அரச அதிகாரிகளுக்கு தடை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசாங்கத் துறையில் பணிபுரியும் உயர் அதிகாரிகளுக்கு பிஸினஸ் க்ளாஸ்களில்

02 »»

# இப்றாஹீம் அன்சார் தலைமையில் ஹஜ், உம்றா குழு நியமனம்



ஹஜ் மற்றும் உம்ரா குழுவிற்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்

02 »»

# வக்பு சபைக்கும் புது உறுப்பினர்கள்



இலங்கை வக்பு சபைக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்

02 »»

# அமைச்சரவை கூட்டம் இன்று கண்டியில்

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் திங்கட்கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது.

ஞாயிறன்று

02 »»

# 4800 அதிபர்கள் புதிதாக நியமனம்

### அடுத்த வாரம் நேர்முகப் பரீட்சை

கல்வி அமைச்சு புதிதாக 4800 அதிபர்களை நியமிக்கவுள்ளது. இதற்காக கல்விச் சேவை ஆணைக்குழு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

02 »»

## வேட்பாளர்களின்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

திட்டங்கள் தொடர்பாக இளைஞர் குழுவொன்றுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் இந்த இளைஞர்கள் குழு நாட்டின் பிரதான நாளிதழ் ஒன்றில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்ததுடன், அது தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக அந்த கட்டுரையை எழுதி வெளியிட்ட இளம் ஊடகவியலாளர்களான அனுஷ்கா ஜெயசூரிய மற்றும் செனோன் சல்காது ஆகியோருடன் தன்னை சந்திக்க வருமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த இளைஞர் குழுவிற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த சந்திப்பு, இளைஞர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதற்கும் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் ஜனாதிபதிக்கு வாய்ப்பாக அமைந்தது. இதன்போது, இளைஞர் குழுவினர் தமது பிரச்சினைகளையும் யோசனைகளையும் முன்வைத்தனர். அவர்களின் கேள்விகள் மற்றும் கருத்துக்களை ஜனாதிபதி செவிமடுத்ததுடன் அவர்களுடைய கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பாடசாலை மட்டத்தில் முறையான மனநலக் கல்வி அவசியமானது எனவும் மாற்றுத்திறனாளிகளுக்கான முறையான கல்வி முறையின் அவசியத்தையும் இளைஞர் குழு வலியுறுத்தியதோடு கல்வித் துறையில் உள்ள குறைபாடுகள் குறித்து இங்கு பிரதானமாக ஆராயப்பட்டது.

பாடசாலைகளில் மனநலம் தொடர்பில் வழங்கப்படும் கவனம் போதுமானதாக இல்லை எனவும் மனநல குறைபாடு உள்ளவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் தொடர்பில் அதிகமாக விடயங்கள் செய்ய வேண்டியிருப்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். இத்துறைக்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆளணிகள் இல்லாததே நாடு எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பல நாடுகளில் வரி என்பது புதிய கருத்தல்ல. ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை என வரி விவகாரத்தை முன்வைத்து இளைஞர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத்தினால் ஆராய முடியும் எனவும் அதற்காக பல குழுக்களை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு மற்றும் பொது நிதிக் குழு உள்ளிட்ட மேலும் பல குழுக்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்த பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் கொண்டு வரப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

புதிய வரிகள் காரணமாக வெளிப்படைத்தன்மை பாரிய பிரச்சினையாக காணப்படுவதாகவும், திடீரென தமது சம்பளத்தில் பெரும் பகுதியை செலுத்த வேண்டியிருப்பதனால் மக்கள் அதனை கடுமையாக உணர்ந்துள்ளதாகவும் இளைஞர் குழு , ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள்,

“பெரிய வரவு செலவுத் திட்டத்தில் அனைத்தும் முறையாக ஒதுக்கப்படுவதால் வெளிப்படைத்தன்மை இருக்கிறது. எந்தவொரு வரவு செலவுத் திட்டத்திலும், பணம் முறையாக செலவிடப்படுவதை பாராளுமன்றம் தான் உறுதி செய்கிறது. எனவே, பாராளுமன்றம் தனது அதிகாரங்களை இப்போதே பயன்படுத்த வேண்டும். கடந்த முறையும் மேற்பார்வைக் குழுக்களின் தலைவர் பதவிக்கான வெற்றிடங்களை எதிர்க்கட்சிகள் நிரப்பவில்லை. இம்முறை அவர்கள் தெரிவுக்குழுக்களின் செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்திற்கு வரவில்லை. ஆனால் அதற்கு எதிர்க்கட்சியில் இருந்து சில பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. அதுதான் வெளிப்படைத்தன்மை. செலவுகள் மற்றும் ஏனைய விடயங்களைப் பற்றி நீங்கள் அவர்களிடம் கேட்கலாம்.““ என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## சிறுபாண்மை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முதல் முயற்சிகளில் பிரதானமாக, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களை நலாயிரமாகக் குறைப்பதே ஜனாதிபதியின் கவனமாகியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றிக் கருத்து தெரிவித்த அவர், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு சகல எம்பிக்களதும் ஒத்துழைப்பையும், கோரியுள்ளார். ஆனால்,இதற்கான ஒத்துழைப்புக்களை எதிரணிகள் வழங்குமா? என்பது சந்தேகத்துக்கு இடமாகியுள்ளது. எதிரணிகளின் எதிர்பார்ப்பில் மண் அள்ளித் தூ வியதுபோல்,உள்ளூராட்சி சபைத் தேர்தல் இழுத்தடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில்,உறுப்பினர்களைக் குறைப்பது பொருளாதாரத்துக்குப் பலம்சேர்க்கும் என்ற போர்வையையும், பொருளாதார வீழ்ச்சிக்குள் தங்களது பலவீனத்தை மறைக்கும் ஜனாதிபதியின் தந்திரத்தையும் எதிர்க்கட்சிகள் எவ்வாறு நம்பப்போகின்றன. இதனால், ஜனாதிபதியின் இந்த அழைப்பு எந்தளவு பயனளிக்கும் என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் எத்தனையோ இருக்கையில்,உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் உறுப்பினர்களை குறைக்க அவசரப்படுவது ஏன்? தேர்தலை ஒத்திப்போடுவதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நியாயப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளா? இவை என்றும் எதிரணிகள் சந்தேகிக்கின்றன.

இதுகுறித்து சிறுபான்மைத் தலைமைகள் கரிசனை கொள்வது அவசியம். ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்துவிட்டு, எதிலும் பங்கெடுக்காமல் இருப்பது ஆபத்தையும் ஏற்படுத்தலாம்.தேர்தல் இழுத்தடிப்புச் செய்யப்படுவதற்கான ஆத்திரத்துக்குப் பழிவாங்க ஜனாதிபதியின் அழைப்பை உதாசீனம் செய்வது ஆரோக்கியமானதல்ல.

ஏனெனில்,சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள், எதிரணிகளிலே அதிகம் உள்ளன. இத்தலைமைகள் இதுகுறித்த கருத்தாடல்களில் கலந்துகொண்டு சமூக அபிலாஷை களை முன்மொழிவதுதான் பொருத்தமானது. ஒரு காலத்தில், இந்த முன்மொழிவுகள் சாட்சிகள் அல்லது பதிவுகளாக அங்கீகரிக்கப்படும் என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

எனவே,சமூகத்தின் இருப்பு, பிரதிநிதித்துவம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்த அரசாங்கத்தின் முயற்சிகளில் எதிரணியில் உள்ள சிறுபான்மைத் தலைமைகள் பங்கெடுப்பதே சிறந்தது.இவ்வாறு, எண்ணிக்கைகள் குறையும்போது,ஓரிரு ஆசனங்களால் காப்பாற்றப்பட்ட பிரதேச அடையாளங்களும் பறிபோகும் ஆபத்தில் உள்ளன. இதையுணர்ந்து சிறுபான்மைத் தலைமைகள் செயற்படுவது அவசியம். ஆனாலும்,பெரும்பான்மை பலமில்லாத அரசுக்கு,எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்றி எதையும் செய்ய முடியாது என்ற தைரியத்திலே எதிரணிகள் உள்ளன.

## தேர்தல்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நான் ராஜினாமா செய்தது குறித்து, நமது சமூகத்தில் உள்ள சிலர் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்திருந்தனர். அவர்கள் என்மீது கொண்டுள்ள நன்மதிப்பு மற்றும் நம்பிக்கைக்கு எனது நன்றிகள்.

பாராளுமன்றத்தில் நான் அநேக அமர்வுகளில் பங்கேற்று, முழு நாட்டுக்காகவும், முஸ்லிம் சமூகத்திற்காகவும், கொழும்பு மாநகர மக்களுக்காகவும் குரல் எழுப்பியுள்ளேன்.

கொழும்பு மேயராக வருவதன் மூலம், அம்மக்களுக்கு மேலும் உச்சக்கட்ட சேவைகளை வழங்க முடியுமென்று நம்பினேன். எனது நம்பிக்கையின் காரணமாக பாராளுமன்ற பதவியை ராஜினாமா செய்தேன். தற்போது உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறுவதில் தாமதம் நிலவுகிறது.

தேர்தலில் தோல்வியடைவோம் என்ற அச்சத்தில் ரணில், தேர்தலை ஒத்திப் போடுவதில் வெற்றி பெற்றுள்ளார். எனினும் அவர் நாட்டை முன்னேற்றுவதிலோ அல்லது மக்களை வெற்றெடுப்பதிலோ தோல்வியடைந்து விட்டார் எனவும் முஜீபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்தார்.

## ராஜபக்ஸாக்களை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

சீரழித்து விட்டனர் எனவும்,நன்றாக வாழ்ந்த மக்களின் அன்றாட வருமானம் சரிந்தாலும் அந்நிலையை உருவாக்கிய ராஜபக்சர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பாதுகாத்து வருவதாகவும்,யானை-காகம்-மொட்டு பொதுக் கூட்டு மக்கள் வாழ்வை அழித்துவிட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மின் கட்டணம்,எரிபொருள் விலை,எரிவாயு விலை,வரி அதிகரிப்பு போன்றவற்றை அதிகரிப்பதன் மூலம் வியாபாரம் செய்யாதீர்கள்,தொழிலை நிறுத்துங்கள், தொழிற்சாலைகளை மூடுங்கள்,வேலை வழங்காதீர்கள் என்ற செய்தியை அரசாங்கம் விடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையையும் சுருக்கி அதலபாதாளத்தில் தள்ளவே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பணப்பையை காலி செய்து மக்களின் கனவுகளை அழித்த இந்த மக்கள் ஆணை இல்லாத அரசாங்கம்,ராஜபக்சர்களின் சொர்க்கமாக மாறியுள்ளதாகவும், ராஜபக்சர்களின் திருட்டுக்களைப் பாதுகாக்கும் கைபொம்மையாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு அடுத்த தேர்தல் வெற்றியுடன் ஐக்கிய மக்கள் சக்தி செயற்படத் தொடங்கவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வீழ்ந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டுமானால்,ஒரு பாரிய தேசிய புரட்சி எழ வேண்டும் எனவும்,அது ஒரு அரசியல் புரட்சி மட்டுமல்லாது,அபிவிருத்திப் புரட்சியும்,புதிய சிந்தனா ரீதியான புரட்சியுமாகும் எனவும்,அதற்கு இந்நாட்டில் காலாவதியான கல்வி முறை மாற்றப்பட்டு சர்வதேச சந்தைக்கு ஏற்ற நவீன தொழில்நுட்பத்துடன்,நவீன திறன்களை உருவாக்கும் ஆங்கில மொழியறிவுக்கு முன்னுரிமை வழங்கும் கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதையெல்லாம் செய்யும் போது மக்கள் மீது வரிச் சுமை சுமத்தக்கூடாது எனவும், மக்களின் கைகளில் பணம் புழங்கும் முறை உருவாக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தியை ஈட்ட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதுளையில் நேற்று (8) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கல்விக்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

இம்மாதம் 28ஆம் திகதி வரை இந்த அவகாசம் அளிக்கப்பட்டதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் தாம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, பழைய பாடத்திட்டமா?, புதிய பாடத்திட்டமா? என்ற விபரங்களோடு, உயர்தரப் பரீட்சையில் இஸட் பெறுமான முகவரி உட்பட விபரங்களை உள்ளடக்கி கல்வி கல்லூரிப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

புதிதாக நியமனப் பத்திரங்களை கோர வேண்டி ஏற்படும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் மார்ச் இறுதியில் வழங்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அவர் அதன்படி உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்துவர்களின் எண்ணிக்கை 8400லிருந்து 5000ஆகக் குறைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அவ்வாறு அங்கத்தவர்கள் குறைக்கப்பட்டால் உள்ளூராட்சித் தேர்தலை அந்த நிலைமையின் கீழே நடத்த வேண்டும்.

எனவே, தற்போது கோரப்பட்டுள்ள நியமனப் பத்திரங்கள் ரத்து செய்ய வேண்டி ஏற்படலாம் என்றும் அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

## அமைச்சரவை...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

கண்டி நடைபெற்ற ஜனரஞ்சக பெரஹராவை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தலைமையில் இவ்வார அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## 4800...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

4800 அதிபர்களைத் தெரிவு செய்வதற்காக பத்தாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அடுத்த வாரம் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். சில பாடசாலைகள் கடந்த பல மாதங்களாக அதிபர் இல்லாமல் இயங்கி வருவதனை அடுத்தே விசேட அனுமதியினைப் பெற்றே அதிபர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

உயர் தரமுள்ள பாடசாலைகளுக்கும் மாகாண மட்ட பாடசாலைகளுக்கும் இவ்வாறு புதிதாகத் தெரிவு செய்யப்படும் அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

## பிஸ்னஸ்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

பயணம் செய்வது தடை செய்யப்பட்டு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இனி சகல அதிகாரிகளும் சாதாரண தர விமான டிக்கெட்டுகளிலே பயணிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம் இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளது.

அடுத்த வாரம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிவர அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் பிஸினஸ் க்ளாஸ் விமான டிக்கெட்களுக்கு விண்ணப்பித்திருப்பதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதி அரசர்கள், உயர் நீதிமன்ற நீதி அரசர்கள், முறையீட்டு நீதிமன்ற நீதி அரசர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், சட்டமா அதிபர்கள் ஆகியோருக்கே பிஸினஸ் க்ளாஸ் விமான டிக்கெட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

## இப்றாஹீம்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

திணைக்கள பணிப்பாளர் உள்ளடங்களாக அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் கடந்த 15ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. ஜனாப் இப்ராஹிம் அன்சார் - தலைவர்
2. ஜனாப் இசட்.ஏ.எம். பைசல் - பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
3. ஜனாப் இபாஸ் நபுஹான் - உறுப்பினர்
4. ஜனாப் நிப்ராஸ் நசீர் - உறுப்பினர்
5. ஜனாப் எம்.எச். மில்பர் கபூர் - உறுப்பினர்
6. ஜனாப் அஹ்கம் உவைஸ் - உறுப்பினர்

இதேவேளை புதிய ஹஜ் மற்றும் உம்ரா குழுவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இசட்.ஏ.எம். பைசல் தெரிவித்துள்ளார்.

## வக்பு...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

உள்ளடங்கலாக அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1982 ஆம் ஆண்டு இலக்கம் 33 மற்றும் 1962 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கம் ஆகியவற்றின் பிரகாரம் திருத்தியமைக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க வக்பு சட்டத்தின் பிரிவு 5(1) இன் படி, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் மூன்று வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்கள் விபரம்

1. ஜனாப் எம்.எல்.எம்.எச்.எம். மொஹிதீன் ஹூசைன் - தலைவர்
2. ஜனாப் இசட்.ஏ.எம். பைசல் - பணிப்பாளர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
3. பேராசிரியர் பி.சி.பி. ஜஹூபர் - உறுப்பினர்
4. சட்டத்தரணி எம்.ஏ. மதீன் - உறுப்பினர்
5. ஜனாப் எம்.எம்.ஆர்.எம். சபர் - உறுப்பினர்
6. ஜனாப் மாஹில் டூல் - உறுப்பினர்
7. ஜனாப் ஏ.ஏ. நசார் - உறுப்பினர்
8. ஜனாப் எம். றியாஸ் சாலி - உறுப்பினர்.

# பௌத்த பிக்குகளின் எதிர்ப்பை புரிந்துகொள்ள முடியவில்லை!

## – இப்படிச் சொல்கின்றார் ரணில்

”அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தீயிட்டு எரித்து பௌத்த பிக்குகள் அவ்வாறு ஏன் நடந்து கொண்டார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பௌத்த பிக்குகள் நடத்திய போராட்டம் தொடர்பிலும், அவர்கள் ஜனாதிபதிக்கு விதித்துள்ள காலக்கெடு தொடர்பிலும் கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதி ரணிலிடம் கேள்வி எழுப்பினார்.

”பௌத்த பிக்குகள் எமது நாட்டில் எல்லோராலும் புனிதத்தன்மையோடு மதிக்கப்படுபவர்கள். அவர்களின் இந்த அவசர நடவடிக்கை தொடர்பில் என்னால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அண்மையில் மகாநாயக்கர்களை நேரில் சந்தித்தபோது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் இலங்கையில் ஏற்படவுள்ள இன - மத நல்லிணக்கம் தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தேன். அவர்களும் எனது கருத்தை வரவேற்றிருந்தார்கள்.

அதன் பின்னர் கொழும்பில் பெரும் போராட்டத்தை பிக்குகளில் ஒரு பகுதியினர் நடத்தியுள்ளனர். இந்த விவகாரத்தை அரசமைப்பு ரீதியில் கையாள்வேன்” - என்றார்.



## துருக்கிய மக்களுக்கு நிதி உதவியளிக்க விரும்புபவர்கள் கீழ்வரும் வங்கியில் வைப்புச் செய்யலாம்

REPUBLIC OF TÜRKIYE EMBASSY

**ANNOUNCEMENT**

1. For volunteers who are willing to provide cash assistance from Sri Lanka and Maldives to people in earthquake-hit areas of Türkiye, please find below the details of bank account opened by our Embassy.

**Account Number** : 003010548748
**Account Name** : TURKISH EMBASSY - DISASTER
**Bank** : Hatton National Bank - Bank Code 7083
**Branch** : Head Office Branch - Branch Code 003
**SWIFT** : HBLILKLX

2. For emergency situation, you can reach us through our Embassy number: +94 76 495 0351.

Regards.












# அரங்கம்

**தேர்தலுக்குள்ள தடைகள்...**

மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்து வந்த போதும் தேர்தலை நடத்த விடாதிருப்பதற்காக அரசாங்க தரப்பில் நாளுக்கு நாள் தடைகள் போடப்படுகின்ற நிலைமையில் 22, 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அஞ்சில் வாக்களிப்பினை மறுஅறிவித்தல் வரை ஒத்திவைத்துள்ளதற்கான அறிவிப்பினை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் இவ்வாரத்தில் ஏற்பட்டது.

இவ்வறிவிப்பினை மார்ச் ஒன்பதாம் திகதி தேர்தல் நடைமுறைப்படுத்துவதற்கு நிச்சமற்றதாகி, பணம் தரும் வரை வாக்குச் சீட்டுக்களை அச்சடிக்க முடியாதென அரச அச்சகக் கூட்டுத்தாபன அச்சகர் கங்காணி கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்தார்.

இந்தத் தீர்மானம் அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. வாக்குச் சீட்டுக்களை அச்சடிப்பதற்கு முன் பணம் செலுத்தும் பழக்கம் இதுவரை இல்லாதிருக்கும் நிலையில் எல்லோருக்கும் இந்த தீர்மானம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் ஆணைக்குழு வாக்குச்சீட்டுகளை அச்சடித்த பின்பே பணம் தருவதாக கடிதம் மூலம் அறிவித்திருந்தும் கூட அரசாங்க அச்சகர் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகிறார்.

அரச தரப்பில் வழங்கப்படும் அழுத்தம் காரணமாக இவர் இந்த நிலைப்பாட்டில் இருப்பதாக எதிர்க்கட்சித் தரப்பினர் தெரிவிக்கின்றனர். எப்படியும் தேர்தலில் நடத்த விட மாட்டோம் என நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் உட்பட அரசு தரப்பினர் இருந்து வருவதனால் எதிர்வரும் 23ஆம் திகதி உயர்நீதிமன்றம் தேர்தலை நடத்த வேண்டும் என தீர்ப்பினை வழங்கினால் அன்றி தேர்தலை

ஒத்திப் போடப்படுவது தவிர்க்க முடியாதுள்ளது. வாக்குப் பத்திரங்கள் முழுமையாக அச்சிடப்படாததனால் 22, 23, 24, 28 ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த அஞ்சல் வாக்களிப்பினை ஒத்தி வைப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தலை ஒத்திவைக்கும் அறிவித்தலின் பின்பு நாட்டில் பெரும் அமைதி இன்மை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உளவுத்துறையினரும் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நடைபெறுமா இல்லையா என்ற நிச்சயமற்ற நிலையிலும் பிரதான எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பியும் மற்றும் எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முடுக்கத் திட்டமிட்டுள்ளன.

டளஸ் அழகப் பெரும தலைமையிலான சுந்தர மக்கள் சபையின் அரசியல் குழுவின் கூட்டம் கடந்த வாரம் தலைவர் அழகப்பெரும தலைமையில் நடைபெற்றது.

பிடகோட்டையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் கூடிய கூட்டத்தில் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு எடுக்கும் முடிவுகள் பற்றி விசேடமாக ஆராயப்பட்டது. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பேராசிரியர் சரித ஹேரத், கலாநிதி நாலக கொட ஹேவா உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நடக்கின்ற நிகழ்வுகளை அவதானிக்கும் போது தேர்தல் ஒத்திப் போடப்படலாம் என்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் சுதந்திர மக்கள் சபையில் அரசியல் பொருளாதர வேலைத் திட்டத்தை புதிய வடிவில் மக்கள் முன் எடுத்துச் செல்வது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதேநேரம் சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டளஸ் அழகப் பெரும, கலாநிதி சரித ஹேரத், நாலக கொட ஹேரத், எல்லானந்த சுமதி பால, உதய கம்மன்பில, டாக்டர் ஜீ. வீரசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**தேர்தலை ஒத்தி வைப்பது குறிதது விரிவான ஆராய்வு**

தேர்தலை ஒத்தி வைப்பது விரிவாக ஆராய்ந்த பின் பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கோரிக்கை விடுப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கையொப்பத்துடன் இக்கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

## பாதைகளை மூடி விசேட விமானத்தில் கொழும்பு வந்த அமெரிக்க இராஜ தந்திரி

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கடந்த செவ்வாயன்று அவசரமாகத் தரையிறங்கிய இரு விமானங்கள் பற்றி அரசியல் அரங்கில் பரவலாகப் பேசப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து இரு விமானங்களிலிருந்து வந்தவர்கள் முக்கிய பிரமுகர்கள் வழியாகவோ, சாதாரண பயணிகள் வரும் வழியாகவோ வெளியேறாது பொருட்களை இறக்கும் பகுதிகளினூடாக விசேட பாதுகாப்புடன் வெளியேறியுள்ளனர்.

இவர்கள் கொழும்புக்கு வருவதற்காக கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியும் மூடப்பட்டு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இந்த விமானத்தில் வருகைதந்தது இந்து பசுபிக் பாதுகாப்பு தொடர்பான அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் ஜெட்டில் பீ ரோயல் உட்பட ஒரு தூதுக் குழுவினரே இதில் வருகை தந்த குழுவினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த சனியன்று யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

இந்திய நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையத்தை திறந்து வைத்த ரணில் தமிழ் கலாசாரத்தின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.

அங்கு அரங்கேற்றப்பட்ட கலாசார நிகழ்ச்சிகளை ரணிலுடன் தூது குழுவினரும் கண்டு களித்தனர்.

ஜனாதிபதி விருந்தினர் பக்கம் விளித்து நாம் இங்கு இருப்பதனால் சாதாரண மக்களுக்கு இதனைக் கண்டு களிப்பதற்குத் தடையாக இருக்கும் என்று ரணில் தெரிவித்தார். அதிதிகள் அங்கிருந்து இடம்பெயர மக்கள் மேடைக்கு கீழே இறங்கி வந்து நிகழ்ச்சிகளை பார்வையிடுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

அடுத்த தினம் கொழும்பு திரும்பும் வழியில் கிளிநொச்சியில் வயல் வெளிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணமானார்.

நல்ல அறுவடை உள்ள வயல்களைப் பற்றி ஜனாதிபதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்தே ஜனாதிபதி வயல் வெளிக்கு நடந்து செல்வதுக்குத் தீர்மானித்தார்.

குறுகிய கால அறிவிப்புடன் அங்கு சென்றதனால் மட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளே பணியில் இருந்ததனால் விவசாயிகளுக்கு ஜனாதிபதியுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

விவசாயிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார். எமக்கு வசதிகளைத் தந்தால் நாட்டுக்கு கூடுதலான நல்ல விளைச்சலைத் தர முடியும் என்று விவசாயிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, நான் பசளை, மருந்து மற்றும் தேவைகளைப் பெற்றுத் தருவேன். நீங்கள் முழு நாட்டுக்கும் தேவையான அரிசியினைத் தாருங்கள் என்று ஜனாதிபதி சிரித்துக்கொண்டே கூறினார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 FEBRUARY 20 - MONDAY

Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## மக்களின் ஜனநாயக உரிமைக்கு ஆப்பா?

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா நடைபெறாதா என்ற கேள்விகளுக்கு மத்தியில் எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே எம்மால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு, தேர்தலுக்கான திகதியும் குறிப்பிடப்பட்டு வேட்பாளர்கள் பிரச்சாரங்களையும் ஆரம்பித்திருந்த நிலையில், அமைச்சரவை அங்கீகாரத்துடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிரூபமொன்றில் அத்தியாவசிய தேவைகள் எவை என வகைப்படுத்தப்பட்டதன் மூலம் மக்களின் அடிப்படைய உரிமையான வாக்களிக்கும் உரிமை நிராகரிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் அது அரசாங்கத்திற்கு தோல்வியை ஏற்படுத்தும் என்ற தெளிவான சமிக்சைகள் தென்பட்ட நிலையில், எப்படியேனும் தேர்தலை காலம் தாழ்த்த வேண்டிய தேவை குறிப்பாக ரணில் தலைமையிலான அரசாங்கத்திற்கு இருந்தது.

அந்த நிலைப்பாட்டில் அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தாலும், மக்களின் ஜனநாயக உரிமைக்கு அரசாங்கம் திட்டமிட்ட பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் மூலம், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஏது நிலையை தோற்றுவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகத்தின் காவலன் என்ற நாமத்தை தனது கரங்களினாலே அழித்துக் கொண்டுள்ளார், இந்த இழிபெயரில் இருந்து அவ்வளவு இலகுவில் அவரை வரலாறு விடுவிக்கும் என்ற நம்பமுடியாது என்பதே கசப்பான உண்மையாகும்.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS

# பிரபல மேரி ஸ்டெல்லா அணியை வீழ்த்தி கஹட்டோவிட அல்பத்ரியா சாம்பியன்



(அப்ஹாம் நிஸாம்)

*கம்பஹா ஸ்ரீ போதி மைதானத்தில் நேற்று (20) நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்து சுற்றுப்போட்டியில் கஹட்டோவிட்ட அல் பத்திரியா அணி சாம்பியன் பட்டம் வென்று அகில இலங்கை ரீதியான சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது.*

*நேற்று முன்தினம் ஆரம்பமான கம்பஹா வலய மட்ட போட்டிகளில் சகல போட்டிகளிலும் வென்று இன்றைய மாவட்ட ரீதியான சுற்றுக்கு தகுதி பெற்றது.*

*நேற்று முன்தினம் நடந்த போட்டிகளில் முறையே சுயதயளபெொய அணியை 2-0 என்ற கணக்கிலும்* Minuwangoda Nalanda *அணியை 3-0 என்ற கணக்கிலும்* Thaksila *அணியை 5-0 என்ற கணக்கிலும் வீழ்த்தி இன்றைய சுற்றுக்கு தகுதி கண்டது.*

*இன்றைய காலிறுதிப் போட்டியில் உடுகொட அரபா வித்தியாலயத்தை எதிர்கொண்ட பத்ரியா அணி 2-0 கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியில் நீர் கொழும்பு அல் ஹிலால் தேசிய பாடசாலையை எதிர்கொண்டது. இப்போட்டியில் 1-0 கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டியை எட்டியது.*

*இறுதிப்போட்டியில் நீர் கொழும்பு மேரி ஸ்டெல்லா அணியை எதிர்கொண்டது அல் பத்ரியா. நட்சத்திர வீரர் குயணையெ இறுதி நேரத்தில் பெற்றுக் கொடுத்த கோல் பத்ரியா அணியை கம்பஹா மாவட்ட சாம்பியனாக மகுடம் சூட்டியதுடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அகில இலங்கை ரீதியான சுற்றுக்கும் தகுதி பெற வைத்தது.*

*மேலும் இத்தொடரில் அல் பத்ரியா அணி எந்த ஒரு கோலையும் விட்டுக் கொடுக்காமல் விளையாடியதுடன் அல் பத்ரியா சார்பாக மாணவன் குயணையெ மொத்தமாக 11 கோல்களை பெற்றுக் கொடுத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.*

*அணியை சிறப்பாக வழி நடத்தும் பொறுப்பாசிரியை மற்றும் ஆசிரியர்* Rowsan *அவர்களுக்கும் வீரர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களுக்கு உரித்தானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.*



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# மனநலமும் ஆலோசனையும்

# கிராமியம்

எங்கள் வாழ்விடத்தின் மகிழ்ச்சி எங்களுக்கு முக்கியமானது என்று நாங்கள் அனைவரும் உறுதியாக நம்புகிறோம். நகர்ப்புற மக்களும் நகரை அண்டிவாழும் மக்களும் கிராமத்து மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் அவர்களின் எளிமையான, சுகமான வாழ்வியல் முறை பற்றி உற்சாகமாக கருத்துத் தெரிவிப்பதை இன்றெல்லாம் அதிகம் பார்க்கிறோம்.

நகரத்தில் வசிக்கும் ஐந்தில் நான்கு பேர் கிராம வாழ்க்கை வழங்கும் சுகங்களில் மிகவும் திருப்தி அடைகிறார்கள் என்ற செய்தியை நாம் கேள்விப்பட்டிருக்கலாம். கிராமிய வாழ்க்கை உடல் நலத்திலும் உள நலத்திலும் பாரியளவு தாக்கம் செலுத்துவது இதற்கான காரணமாக இருக்கலாம்.

அமைதியும் அழகும்
இயற்கையும் இனிமையும்
நிரம்பிய இடம் கிராமம்.

நகர வாழ்க்கையின் பரபரப்புகள், சலசலப்புகள், எரிச்சல்கள், உளைச்சல்கள் எதுவும் இல்லாத உள்ளத்துக்கும் உடலுக்கும் ஆறுதலையும் ஓய்வையும் அள்ளித் தரும் இடம் கிராமம்.

கிராமம்
என்கின்றபோதே
அதற்கே உரித்தான சில அடையாளங்கள் கண்முன்னே வந்து அமர்ந்து கொள்கின்றன.

மனதுக்குள்ளே சிறகடிக்கின்றன.

மரம் செடி கொடிகள், வயல்வெளிகள், நீரோடைகள், கிணறுகள், குளம், ஒற்றையடி பாதைகள், திண்ணை வீடுகள், முற்றம், ஆலயங்கள், விவசாயம், கால்நடைகள், மீன் பிடித்தல், வேட்டையாடுதல் இப்படி பல விடயங்கள் கிராமிய நினைவுகளாக வருகின்றன.

சுவையான சுத்தமான நிலத்தடி நீர், பாரம்பரிய உணவுகள், காய்கறிகள், பழங்கள், அதிகாலை சேவலின் கூவல் எல்லாமே கிராமத்தின் தனித்துவமான தன்மைகள்.

பரந்த சூழலும்,
இரைச்சல் இல்லாத அமைதியும்,
இயற்கையோடு இணைந்த உறவும்,
பசுமையும் எளிமையும் கொண்ட வாழ்வும்,
மன இறுக்கம் அற்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறையும்

உம்மம்மா வாப்பம்மா
பெரியம்மா பெரியப்பா
சாச்சா சாச்சி
மாமா மாமி
தாத்தா நானா இப்படி உறவு முறைகளை வாய் நிறைய வெளிப்படுத்தி உறவை உயிராய் பேணுவதில் இன்பம் காண்பவர்கள்

கிராமத்தோடு சேர்ந்து வரும் மரபுகளும் பிரிக்கவே முடியாத இணைப்புகளும் அவ்வளவு கிராமத்துக்கே உரித்தான உயரிய குணங்கள்.

கிராமத்து மக்கள்
வஞ்சகமில்லா மனம் படைத்தவர்கள்.
உபசரிப்பதில் ஊறிப்போனவர்கள்.
கொடுப்பதில் குதூகலம் காண்பவர்கள்.
விருந்தோம்பலில் கபடம் காட்டாதவர்கள்.

அழகாகவும் கேட்பதற்கு ரம்யமாகவும் கிராமத்தோடு ஒட்டி வாழவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

கிராமப் புறம்,
கிராமிய வாழ்க்கை,
கிராமியத்துவம்,
கிராமியத்தனம்,
கிராமிய மனம்,
கிராமியப் பாடல்,
கிராமிய மருத்துவம்,
கிராமிய கலாச்சாரம்,
கிராமிய பண்பாடு,
கிராமிய சாப்பாடு,

கிராமவாசிகள் இப்படி கிராமத்தோடு ஒட்டிய கிராமிய வாழ்வியலை அலங்காரம் செய்யும் எத்தனையோ சேர்மானங்களும் எத்தனையோ கலவைகளும் நிறைந்து இருக்கும்.

இயற்கையோடு இயைந்த பல வாழ்வியல் முறைகளை இப்பவும் கிராமங்களில் காணலாம்.

அதில் விறகடுப்பில் சமைக்கும் மண்பானை சமையல்கள் மனித மனங்களில் மகத்தான இடம் பிடித்தவை.

பாரம்பரியத்தின் சின்னமாக,
வரலாற்றின் ஊற்றாக இருந்ததும்
இருந்து வருவதும் கிராமமும் கிராமிய வாழ்வியலும் தான்.

# சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சுதந்திர தினம் அனுஷ்டிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தின சனிக்கிழமை சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீமின் நெறிப்படுத்தலில் அதன் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல். சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதன் போது பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.சீ.எம்.பாஹிர் மௌலவியினால் நாட்டின் சுபீட்சத்துக்காகவும் நாட்டு மக்களின் வளமான வாழ்வுக்காகவும் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டு, பள்ளிவாசலில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. இம்மரநடுகை நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல். சம்சுதீன் மற்றும் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் மரங்களை நட்டி வைத்தனர்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். அஸீம், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.அப்துல் மஜீது, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள், மரைக்காயர்மார்கள், அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# ரீ 10 கடினபந்து போட்டியில் மடவளை தேசிய பாடசாலை சம்பியன்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஒன்ஸ்லெட் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 8 அணிகள் பங்கேற்ற 15 வயதிற்குட்பட்ட ரீ 10 கிறிக்கட் சுற்றுப் போட்டியில் மடவளை தேசிய பாடசாலை ரோயல் அகடமி அணியை 38 ஓட்டங்களினால் வெற்றி கொண்டு சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மடவளை மதீனா தேசிய பாடசாலை 5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரோயல் அகடமி அணி 5 ஓஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களை மாத்திரமே பெற்று கொண்டது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS

# 2023 ஆம் ஆண்டுக்கான அகல் விருது வழங்கள் விழா




(அபு அலா)

பயன்களை எதிர்பாராமல் நன்நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக சேவைகளை, சமூக வெளியில் கொண்டு செல்லாம் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து வருகின்றவர்ளூாடாக, கற்றுக்கொண்ட பாடங்களையும், அவர்களின் முன்மாதிரியான செயற்றிட்டங்களைப்பற்றி இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக முன்னிருத்தி செயற்படவேண்டும். அப்போதுதான் இளம் தலைமுறையினர் இவ்வாறான பணிகளைச் செய்ய முன்வருவார்களென சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை அன்பின் பாதை சமூகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் "விளிம்புநிலை மக்களின் வாழ்வை ஒளியேற்ற தம் வாழ்நாளினை அர்ப்பணிக்கும் பெருமக்களை கொண்டாடி மகிழல்" என்ற தொனிப்பொருளில் அறம் செய்வோம் அறக்கட்டளையின் முதலாவது அகல் விருது - 2023 வழங்கள் விழா இன்று (18) திருகோணமலை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக சேவைகளைச் செய்யவேண்டும் என்ற நன்நோக்கில் இளம் வயதிலிருந்தே தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டுவருகின்ற சன்முகா மகளிர் இல்லத்தின் முகாமையாளர் செல்வி விமலா நடராஜாவின் சமூக சேவைகளைப் பாராட்டியாக

வேண்டும். அவர் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு மறைமுகமாக பல்வேறுபட்ட சமூக சேவைகளைச் செய்து வருவதென்பது மிக இலகுவான விடயமல்ல. அது கடும் சவால் மிக்கதொன்றாகும். இவ்வாறான பணிகளைச் செய்து வருகின்றவர்கள் தங்களின் சேவைகள் சமூக வெளியில் கொண்டு செல்வதை எதிர்பார்ப்பதும் இல்லை, விரும்புவதும் இல்லை.

இவரைப்போன்ற பலர் இன்னும் மறைமுகமாக இருந்துகொண்டு செயற்பட்டு வருவார்கள். அவ்வாறானவர்களையும் அறம் செய்வோம் அறக்கட்டளை அடையாளம் கண்டு அவர்களின் நற்செயற்பாட்டினை இளம் தலைமுறையினர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களையும் இவ்வாறான சமூக செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் உதவி புரியவேண்டும்.

அறம் செய்வோம் அறக்கட்டளை கடந்த மூன்றாண்டு காலமாக இலங்கையிலுள்ள காப்பகங்கள், வலையமைப்புக்கள், சமூக சேவை நிறுவனங்கள் ஊடாக சிறுவர்கள், விசேட தேவையுள்ளோர் மற்றும் முதியோர்களின் வாழ்வை மேம்படுத்த பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அவர்கள் மக்களின் மேம்பாட்டிற்காகவே தங்களின் நேரகாலங்களைச் செலவிடுகின்றனர். அவர்களின் சேவைகளுக்கு எங்களாலான உதவிகளைச் செய்ய முன்னிப்போம் என்றார்.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் (திருமதி) றிஸ்வாணி றிபாஸ், சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி. தெய்வேந்திரன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேல் உள்ளிட்ட பல அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# பேரம்பேசலால் பலப்படும் தனிநபர் சந்தை; சந்தர்ப்பம் வழங்கியது எது?





சுஜப்,எம்,காசிம்

வாக்காளர்களிலும் பார்க்க சில வேட்பாளர்களுக்கே இந்த உள்ளூராட்சித் தேர்தல் வாய்ப்பாக அமையவுள்ளது. கள முனைகள் என்றுமில்லாத அளவு கனத்துள்ளதும் சிறிய கட்சிகளைப் பலப்படுத்துவதாக இத்தேர்தல் முறை இருப்பதாலும்தான் இந்த வாய்ப்புக்கள் வருகின்றன. பெரிய கட்சிகளின் இருப்புக்களை அடியோடு பிடுங்க முடியாவிட்டாலும் ஆட்டிப்பார்க்கும் தைரியத்தை இந்தக் கலப்பு முறைத் தேர்தல் சிறிய கட்சிகளுக்கு வழங்கியுள்ளது. இதனால்தான் வட்டாரம், விகிதாசாரம் கலந்த இந்தத் தேர்தலின் முடிவுகள், பெரிய கட்சிகள் சிலதைப் பணிய வைத்தும் இருக்கிறது.

2018 இல் அமைக்கப்பட்ட பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிகள், சிறிய கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் தயவில் தங்கியிருக்க நேர்ந்ததும் இதனால்தான். எழுபது, எண்பது வீதமளவில் வாக்குகளைப் பெற்ற பெரிய கட்சிகள், சபைகள் சிலவற்றில் ஆட்சியமைக்க முடியாத தர்மசங்கடத்தையும் இது ஏற்படுத்தியது. இம்முறையில் (2018) நடந்த முதல் தேர்தலில் இப்பலவீனம் வெளிப்பட்டிருந்தது. இம்முறையும், இம்முறையில்தான் இந்தத் தேர்தல் நடைபெற்றாலும் இந்நிலைதான் ஏற்படும். எனவே, இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்த சிலருக்கு இத்தேர்தலே தேவை. இதற்காகத்தான் சில கட்சிகள் தேர்தலைக் கோருகின்றன.

பெரிய கட்சிகளின் பாரம்பரிய கோட்டைகள் ஓரிரு ஆசனங்களால் கவிழ்வது அல்லது அவற்றைக் கவிழ்ப்பது இவைகள்தான் இவர்களது குறிகள். இந்தக் குறிகள் பல கோடிகளைக் குறிவைத்துத்தான். நாட்டின் பொருளாதாரம் அடியோடு வீழ்ந்துள்ள நிலையில், பாரிய அரசியல் சூதாட்டத்துக்காக பணம் விரயமாவதை பொறுப்புள்ள பிரஜைகள் பொறுத்துக் கொள்ளப்போவதில்லை. இதனால், இம்மனநிலையிலுள்ளவர்கள் இந்தத் தேர்தலைப் பொருட்படுத்தவில்லை. இதைப் பொருட்படுத்துமளவுக்கு மக்களின் பொருளாதார நிலைமையும் இல்லை. இதனால்தான், அரசாங்கமும் இதில் அக்கறை செலுத்தவில்லையோ?

இத்தேர்தலில் உள்ள (விகிதாசாரம், 40 வட்டாரம் 60) பலவீனத்தை ஒழித்த பின்னர் தேர்தலுக்குச் செல்லலாமென்ற அரசாங்கத்தின் மனநிலையை எதிரணிகள் புரிந்துகொள்ள மறுக்கின்றன. காரணம், வெற்றிக் கனிகளைப் பறிக்கலாம் என்ற நம்பிக்கையே! ஆனால், அவ்வளவு எளிதாக வெற்றிக்கனியைப் பறிக்கும் வழிகள் இத்தேர்தலில் இல்லை.

பொறுப்புக் கூறும் ஒரு பொறிமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட இம்முறை, பலரையும் பொறுப்பின்றி நடக்கச் செய்துள்ளது. இலட்சத்துக்கும் கோடிகளுக்கும் கொள்கைகளை கொள்ளையடிக்க வைத்துள்ளது இப்புதிய முறை. மக்கள் ஆணையை அளவிடுவதற்கான அடிப்படை அளவுகோலாக உள்ளூராட்சித் தேர்தல் இருக்கலாம். ஆனால், இன்று இதன் நிலையோ அளவின்றி பேரம்பேசும் தனிநபர் சந்தைகளை வளர்த்துள்ளது. இதுதான் கவலை. இதனால், இத்தேர்தலை நடத்தாமல் விடுவதை ஜனநாயக விரோதமாக நோக்க முடியாதுமிருக்கிறது.

ஒரு வெள்ளோட்டமாக அறிமுகமான இத்தேர்தல் முறை எதிர்பார்த்த இலட்சியங்களை எட்டவில்லை. இதனால், ஒரு திருத்தத்துக்கு கால அவகாசம் கோரப்படுகிறது. இதையும் புரிந்துகொள்ளாமல்தான் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. இதை அவதானித்தே தீர்ப்புக்களும் வந்துள்ளன. "தேர்தலை நடாத்துவதற்கான உரிமை, அதிகாரங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு உள்ளதால், புதிதாக உத்தரவிடும் தேவை நீதிமன்றத்துக்கு இல்லை" என்ற தீர்ப்பின் பிரகாரமே திணைக்களமும் செயற்பட்டுள்ளது.

இன்னுமொரு பக்கத்திலும் இதை நோக்கலாம். ஆணைக்குழுக்கழுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் நிறைவேற்றதிகாரத்துக்குள்ள கஞ்சத்தனங்களா இப்போது நிலவும் இழுபறிகள்? இந்தக் கருதுகோள்கள் பலப்படாத அளவுக்கு பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறதா இன்றைய நிர்வாகப் பனிப்போர்? இவைகளே மக்களைக் குழப்பியுள்ளன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலே இப்படித்தான். நடக்குமா? அல்லது நடக்காதா? என்ற ஏமாற்றங்கள் இன்று மட்டுமல்ல. 1987இல் எதிர்பார்த்தது 1994இலே நடந்தது.1999இல் கலைக்கப்பட்டது 2002இல் நடாத்தப்பட ஏற்பாடாகி பின்னர் 2006இல்தான் நடந்தது. 2011இல் நடாத்தப்பட்டு பின்னர் 2015இல் கலைந்தது. பின்னர் கடைசியாக 2018இலே நடாத்தப்பட்டது.

# தேசிய ஒத்துழைப்பு வழங்ககூடிய நாடு தேவை இனவாதம் என்பதே இந்த ஆட்சியாளரின் ஒரே வழி

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸ்ஸநாயக்க!





தேசிய ஒத்துழைப்பு வழங்ககூடிய நாடு தேவை. இனவாதம் என்பதே இந்த ஆட்சியாளரின் ஒரே வழி என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸ்ஸ நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் எற்பாட்டில் யாழ் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடான சந்திப்பு இன்று 17.02.2023 று யாழ். டீம்பர் மண்டவத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துதெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றாக பாதுகாக்கப்படுகின்றனர் இந்த நாட்டினை அழிவுக்கு கொண்டுவந்தது இந்த மோசடியாளர்களால் ஆகவே இந்த நாட்டுக்கு நல்ல அரசாங்கம் தேவை மோசடிக்காரர்களுக்கு தண்டணை வழங்குகின்ற அரசாங்கம் தேவை மோசடிசெய்த மீண்டும் பெற்றுக்கொள்ளுகின்ற அரசாங்கம் வேண்டும். அதற்காக ஒன்றினைய வேண்டும்.

இந்த நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறுகின்றார் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை வழங்குவோம் என்று. பொலிஸ், காணி, அதிகாரத்தினை வழங்குவோம் என்று கூறுகின்றார். இது ஏன்? தென் பகுதி பெரிய பிரச்சினையினை உருவாக்கி அங்கு ஆர்ப்பாட்டங்களை உருவாக்க உண்மையான பிரச்சினை ஆட்சியாளர்களுக்கு எதிராக இருக்கின்றது. அதனைவிடுத்து ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களை குழப்பி வடமாகாண தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுத்துகின்றார்.

இந்த ஜனாதிபதி நான்கரை வருடங்கள் பிரதமராக இருந்தார். புதிய அரசியலமைப்பு யாப்பினை தயாரிப்பதற்கு ஒரு சபை தாபிக்கப்பட்டது. அதில் ஒரு குழுவினை அமைத்தனர். இதில் 82 கலந்துறையாடல்கள் இடம்பெற்றன.

அதில் எந்ததொரு அறிக்கையும் புதிய அரசியலமைப்பு யாப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கவில்லை.

வடக்கின் பிரச்சினை வடக்கின் சூதாட்டாமான நிலையினை வைத்துயிருக்கவேண்டிய நிலையினை உருவாக்கதான் வடக்கில் தேர்தல் வரும்போது 13 ஆவது திருத்தச் சட்ட பந்தினை வடக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்கினேஸ்வரன், தென் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் இருவரும் பந்து அடித்து விளையாடுகின்றனர் என்றார்.

இதில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# பாக்கிஸ்தான் ஓரஞ்சு பழ அறிமுக நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பில் உள்ள பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகராலயத்தால் நடத்தப்பட்ட பாகிஸ்தான் மாண்டரின் ஓரஞ்சு பழ அறிமுக நிகழ்வு

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம், பாகிஸ்தானின் வர்த்தக மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சின் (TDAP) ஒத்துழைப்புடன், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பாகிஸ்தான் மாண்டரின் ஓரஞ்சு பழம் (Mandarins) சம்பந்தமான அறிமுக நிகழ்வை கடந்த 16 அன்று ஏற்பாடு செய்திருந்தது விவசாய இராஜாங்க அமைச்சர் மோகன் பிரியதர்ஷன டி. சில்வா பிரதம அதிதியாக வும் பாராளுமன்ற உறுப்பிணர் ஏ.எச். எம்.பௌசி கௌரவ அதிதியாகவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) உமர் பாரூக் பர்கி இதன் போது கருத்துத்தெரிவிக்கையில்,

பாகிஸ்தானின் மிகச்சிறந்த உற்பத்தி ஒன்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவது இட்டு பெருமை அடைவதாகவும் உலகில் சிட்ரஸ் பழங்களை உற்பத்தி செய்வதில் பாகிஸ்தான் 12வது இடத்தில் உள்ளதாகவும், பாகிஸ்தானுக்கு சொந்தமான தனித்துவமான சிட்ரஸ் வகையான மாண்டரின் ஓரஞ்சு பழ பழத்தின் மிகப்பெரிய உற்பத்தியாளர் பாகிஸ்தான் திகழ்கிறது எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை இறக்குமதியாளர்களை பாகிஸ்தானில் இருந்து போட்டி விலையில், உயர்தர மாண்டரின் ஓரஞ்சு பழங்களை இறக்குமதி செய்ய உயர் ஸ்தானிகர் ஊக்குவித்ததோடு, இதன் மூலம்சுவையான மாண்டரின் ஓரஞ்சு பழத்தை அனைத்து இலங்கையர்களும் அனுபவிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளர் திருமதி அஸ்மா கமல் கருத்துத்தெரிவிக்கையில் பாகிஸ்தான் சிட்ரஸ் துறை மற்றும் அதன் ஏற்றுமதி திறன் பற்றிய விரிவான விளக்கத்தை வழங்கியதோடு கராச்சியில் உள்ள எக்ஸ்போ மையத்தில் 2023 பெப்ரவரி 4 முதல் 6 வரை பாகிஸ்தான் வர்த்தக மேம்பாட்டு ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தானின்

முதலாவது சர்வதேச உணவு மற்றும் விவசாய கண்காட்சி குறித்தும் பார்வையாளர்களுக்கு விளக்கினார்.

# நானுஓயாவில் காட்சிப் பொருளான விபத்தை ஏற்படுத்திய பேருந்து!





(செ.திவாகரன்)

கடந்த 20ம் திகதி நானுஓயா - ரதல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் 53 பேர் படுகாயமடைந்திருந்தனர். இவ் விபத்தில் பலத்த சேதமடைந்த பேருந்தினை ஒரு மாதமாகியும் நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா பிரதான நகரில் வீதியோரம் காட்சி பொருளாக உள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நானுஓயா நகரம் உள்நாட்டு ,வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கூடுதலாக விரும்பும் நகரமாகும் , நுவரெலியா பகுதிக்கான புகையிரத சேவையின் மத்திய நிலையமாகவும் நானுஓயா நகரம் காணப்படுவதால் இயற்கை காட்சிகளை புகைப்படம் எடுப்பது போல் கையடக்க தொலைபேசியிலும் , கேமரா மூலமும் பேருந்தினை படம் பிடித்தும் செல்கின்றனர் அத்துடன் வீதியோரம் அகற்றப்படாமல் இருக்கும் பேருந்தினால் ஏனைய வாகன சாரதிகளிடையே விபத்து பீதியை ஏற்படுத்தி வருகிறது என தெரிவிக்கின்றன .

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நானுஓயா பிரதான நகரில் விபத்தை ஏற்படுத்திய பேருந்தினை பொது மக்கள் யாரும் பார்வையிடாத வகையில் மறைமுகமான இடத்தில் அல்லது துணி , கலர் பொலித்தீனை பயன்படுத்தி முழுமையாக மூடி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன சாரதிகளும் , பொது மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

# ஹெம்மாதகமை அல் அஸ்ஹரில் ஊடக பயிற்சி செயலமர்வு









(எம் .எஸ் .அமீர் ஹுசைன்)

ஶ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரத்தின் 73 ஆவது ஊடக பயிற்சி செயலமர்வு 19 ஆம் திகதி ஹெம்மாதகமை அல் அஸ்ஹர் முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

செயலமர்வில் மாலை நேர அமர்வில் இந்த கல்லூரியின் பழைய மாணவரும் முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிதாக நியமனம் பெற்றுள்ள பணிப்பாளர் எஸ் .ஏ.எம் . பைசல் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டார் . செயலமர்வில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன .

இந்த செயலமர்வை அல் அஸ்ஹர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மற்றும் முஸ்லீம் மீடியா போறம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது . கல்லூரி அதிபர் ஏ .சி .எம் . நவாஸ் , ஊடகப்பிரிவு பொறுப்பாசிரியை ஷகீலா மற்றும் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பி . இப்திகார் , முன்னாள் தலைவர் என் .எம் . அமீன் , உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும், விவசாய உணவு உற்பத்திச் சந்தையும்







(அபு அலா)

உள்ளூர் சந்தைக்கான உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும், விவசாய உணவு உற்பத்திச் சந்தையும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் (16) இடம்பெற்றது.

ஜப்பான் அரசாங்க நிதியுதவியின் கீழ் ஜப்பான் நாட்டின் பீஸ் வெயின்ட் அரச சார்பாற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு இணைந்து நடாத்திய இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகவும், ஜப்பான் நாட்டு தூதுவர் கிடாக்கி மிஸிகோசு கௌரவ அதிதியாகவும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

உள்ளூர் சந்தைக்கான உள்ளூர் உற்பத்திக்கூடங்களை பிரதம அதிதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் திறந்து வைத்து அங்கு வைக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களையும் பார்வையிட்டார். திருகோணமலை மாவட்டத்தில் மிகச் சிறந்த முறையில் சேதனைப் பசளைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் நல்ல விளைச்சலைப்பெற்ற உற்பத்தியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்களுடன் நினைவுச் சின்னங்களை ஆளுநர் மற்றும் ஜப்பான் நாட்டு தூதுவர் கிடாக்கி மிஸிகோசு ஆகியோரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



(பேருவளை பீ.எம்.முக்தார்)

வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியாவில் 144வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் பெரிய கந்தூரி வைபவம் எதிர் வரும் 21ம் திகதி (21-2-2023) செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமும் பாழில் அஷ் செய்ஹ் காமில் அஷ் செய்க் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தமாம் மஜ்லிஸ/க்கு தலைமை வகிப்பார்.

வெள்ளிக்கிழமை தவிர 30 நாட்கள் ஹதீஸ் பராயணம் மற்றும் விளக்கவுரை இடம் பெற்றுவருவதோடு எதிர்வரும் 21ம் திகதி பகல் தமாம் பெரிய கந்தூரி இடம் பெறும்.

பெப்ரவரி 20ம் மற்றும் 21ம் திகதிகளில் இலங்கை ரயில்வே திணைக்களம் வழமை போல் கொழும்பு - பேருவளை மற்றும் காலி - பேருவளை இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தும். அத்தோடு கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில் வண்டிகளும் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும்.

20ம் திகதி இரவு மற்றும் 21 ஆம் திகதி பகல் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த உலமாக்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள், முஸ்லிம்கள் பெருமளவில் பங்குபற்றுவார்கள்.

பெண்கள் வருவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.